# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம், புத்தூர்

J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM
Duty First and fore Most
PUTTUR
ESTD 1910

17.11.2016

# பரிசில் நாள்

# அதிபர் அறிக்கை

# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

# பரிசில் நாள்– 2016

காலம் - 17.11.2016 வியாழன்

நேரம் - பி.ப 1.00 மணி

இடம் - வித்தியாலய மண்டபம்

தலைமை

திரு.**J.A.**தவநாயகம் ( வித்தியாலய முதல்வர்)

பிரதம விருந்தினர்

திருமதி.அனந்தி சசிதரன் அவர்கள்

( கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

சிறப்பு விருந்தினர்

திரு.நா.சிவநேசன் அவர்கள்

( கோட்டக் கல்விப் பணிப்பாளர்,கோப்பாய் கல்விக்கோட்டம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்தியாலய சமூகம்

# யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்

## பரிசில் நாள்- 2016

நிகழ்ச்சிநிரல்

விருந்தினர் வரவேற்பு

கொடியேற்றல்

மங்கள ஒளியேற்றல்

இறைவணக்கம்

வரவேற்பு நடனம்

வரவேற்புரை

அதிபர்: பரிசில் நாள் அறிக்கை

மாணவர் பேச்சு

ஆங்கிலக் கவிதை

மாணவர் பேச்சு –ஆங்கிலம்

பரிசில் வழங்கல்

மாணவர் பேச்சு – சிங்களம்

சிறப்பு விருந்தினர் உரை

பிரதம விருந்தினர் உரை

கலைநிகழ்வுகள்

## மகுடவாசகம்MOTTO

கடமையே கண்**Duty First And Foremost**

## எமது நோக்குOur Vision

அறிவுடன் ஆற்றலும், கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று, சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளைச் சமூகத்திற்கு வழங்கல்.

Generating good Citizens endowed with knowledge and Capabilities, art and culture and a balanced Personality.

## எமது பணிOur Mission

1.பயனுறுதிமிக்க கற்றற் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.Progressing towards competency Goalsthrough effective learning activities.

2. விளைதிறன் மிக்க கற்றற் பேறுகளைக் கொண்ட மாணவர் மையக் கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல். Planning and implementing student-centered Learning activities Which have productive learning outcomes.

3.நல்லொழுக்கம்,மானிடவிழுமியம்,தலைமைத்துவம்,21 ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம்,சவால்களை வெற்றிகொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.

Reflecting in learning outcomes high moral Standards, human values, leadership qualities, requisites for entry into the world of work and life in the 21th century and ability to overcome challenges.

4. இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும்,ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் வழிவகுத்தல். Guiding for full involvement in co-curricular activities and for bringing out full potentials

## எமது குறிக்கோள்

## OUR OBJECTIVES

1. நாளாந்த மாணவர் வரவு வீதத்தை 95 முதல் 100 வீதத்தில் பேணுவதுடன் இடைவிலகுவோர் எண்ணிக்கையை பூச்சிய நிலையில் பேணுதல்

2. மாணவர் சேர்வு வீதம் 100 வீதமாக இருப்பதுடன்,தப்பிப்பிழைப்போர் வீதமும் 100 வீதமாகத் தொடர்ந்து பேணுதல்.

3. தாய்மொழியில் வாசித்தல்,எழுதுதல் ஆகியவற்றில் நலிவான நிலையை இனங்கண்டு அதனை முற்றாக நீக்குதல்.

4. ஆங்கிலம்,சிங்களம் ஆகிய மொழிகளின் அடிப்படைத்திறன்களை அனைவரும் பெற வாய்ப்பளித்தல்

5. வருடாந்தப் பொதுப் பரீட்சைகளில் 80 - 90 வீதமான மாணவர்கள் சித்தி மட்டத்தைப் பெற்றுக் கொள்ளல்

6. க.பொ.த சா.தரத்தில் சித்தி பெறும் மாணவர்களில் 80 வீதமானோர் கணிதம்,விஞ்ஞானம்,தொழிநுட்பம் ஆகிய துறைகளில் உயர்தரம் கற்கும் தகைமையைப் பெற வழிப்படுத்தல்.

7. கிரிக்கட்,எல்லே ஆகிய பெரு விளையாட்டுக்களில் ஆண்,பெண் அணிகளை வலுப்படுத்தி கோட்ட,வலய மட்டத்தில் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல்.

8.தமிழ்மொழித்தினப் போட்டிகள்,ஆங்கில தினப் போட்டிகள்,சமுக விஞ்ஞானப் போட்டிகள்,கணித,விஞ்ஞானப் போட்டிகள்,அழகியற்போட்டிகள்,சைவநெறிப் போட்டிகள் ஆகியவற்றில் கோட்ட,வலய மட்டங்களில் திறமைகளை வெளிப்படுத்த வழிகாட்டல்.

9. சமய நெறிமுறைகளை அனைத்து மாணவர்களும் முறையாகப் பின்பற்றும் வகையில் பழக்கப்படுத்தல்.

10. சுத்தம் மற்றும் சுகாதார நடமுறைகளை நாளாந்தம் பின்பற்றுபவர்களாக மாணவர்களைப் பயிற்றுவித்தல்.

11. ஒழுக்க விழுமியங்களை பின்பற்றுபவர்களாக மாணவர்களை வழிப்படுத்துதல்.(பெரியோரை மதித்தல்,பெற்றோரைக் கனம் பண்ணல்,உயிரினங்களை நேசித்தல்,நன்நடத்தை கொண்டவர்களாத் திகழல் போன்றவற்றை அனனைவரும் பின்பற்ற பயிற்றுவித்தல்

12. பெற்றோர்,பழைய மாணவர்களின் பாடசாலையுடனான ஈடுபாட்டை 80வீ தமாக்குதல்(பாடசாலை அபிவிருத்தி குழு,பழைய மாணவர் சங்கம் ஆகியன திறம்படச் செயற்படல்)

13. பாதுகாப்பானதும்,மகிழ்வூட்டத்தக்கதுமான பாடசாலைச் சூழலை ஏற்படுத்துதல்.

# பரிசில் நாள்-2016

## அதிபர் அறிக்கை

வாதரவத்தைக் கிராமத்தின் கலங்கரை விளக்காக நின்று கிராமத்தவர் அனைவருக்கும் கல்வி எனும் ஒளியூட்டி பாரெங்கும் பிரகாசிக்க வழிசெய்து நிற்கின்ற எம்வித்தியாலய அன்னையின் வளர்ச்சிப்பயணத்தின் 106 ஆம் ஆண்டின் பரிசில் நாள் விழாவிற்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் இந்நந்நாளில் வருகவருகவென வரவேற்று மகிழ்கின்றேன்.இன்றைய நந்நாளில் இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் வடக்கு மாகாண சபையின் கௌரவ உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் அவர்களே! சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்களே! அயற் பாடசாலைகளின் அதிபர்களே! ஆசிரியர்களே! பெற்றோர்களே,பெரியோர்களே,பழைய மாணவர்களே! எமது வித்தியாலய ஆசிரியர்களே,என் அன்புக்குரிய மாணவர்களே அனைவருக்கும் என் இனிய வணக்கத்தினைத் தெரிவித்து நிற்கின்றேன்.

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் தனித்தமைந்த கிராமாகவும், தொலை தூரத்தில் வசதிகளும் வளங்களும் குறைந்த பிரதேசம் என புறக்கணிக்கப்பட்ட வாதரவத்தைக் கிராமம் வறுமையையும் விடாமுயற்சியையும் வல்லமை ஆக்கி அறிவும் ஆற்றலும் மிக்க சமூகத்தை தன்னகத்ததே தோற்றுவித்து பாரெங்கும் புகழ்பரப்பி நிற்பது யாவரும் அறிந்ததே.அத்தகைய பெருமைக்குரிய இக்கிராமத்தின் கலங்கரை விளக்காக நின்று அனைத்து பெருமைகளுக்கும் அடித்தளமிட்ட இறுமாப்போடு தலைநிமிர்ந்து நிற்கின்றது எம் வித்தியாலயம்.முந்நாளில் அர்ப்பணிப்போடு பணியாற்றி வித்தியாலய வளர்ச்சிப்பயணத்துக்கு வழிகாட்டி நின்ற மூத்தோர் அனைவரையும் இவ்வேளையில் முதற்கண் நன்றியுடன் நினைவு கூர்ந்துவாழ்த்துகின்றேன்.

இன்றைய எமது பரிசில் நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாணசபையின் கௌரவ உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் அவர்கள் வடக்கு மாகாண சபையிலுள்ள ஒரேயொரு பெண் உறுப்பினர் என்ற பெருமைக்குரியவர்.காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் குரலெழுப்பியும், ஜெனிவா வரை சென்று ஐ.நா மனித உரிமைப் பேரவையில் முறையீடு செய்தமை வரை துடிப்பும், துணிவுமிக்க

உறுப்பினராக விளங்குகின்றார்.பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாணசபை உறுப்பினர்கள் என பலரிடமும் நாம் விடுத்த கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாத நிலையில் கௌரவ உறுப்பினர் அவர்கள் வசதிகுறைந்த ,வளம் குறைந்த பாடசாலையின் பால் தனது கவனத்தைச் செலுத்தி எமது கோரிக்கையை ஏற்று ரூபா 50,000 த்தை ஒதுக்கீடு செய்து விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய வசதி செய்தமை எமக்குக் கிடைத்த பேருதவியாகும்.கடந்த வருட ஒதுக்கீட்டிலும் கிரிக்கட் உபகரணங்களை நாம் அவரின் வதிவிடம் சென்று கோரிய போது வழங்கி உதவினார்.இவ்வாறாக வளங்குறைந்த அதேவேளை நிறைவு செய்ய வேண்டிய தேவைகள் நிறைந்த இப்பாடசாலையின் பால் கரிசனை கொண்டவர் என்ற வகையில் அவரை இவ்விழாவிற்கு வரவேற்பதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.அவர்தம் மக்கள் பணியில் சிறப்படையவும்,தமது இலக்கில் உயர்வடையவும் இவ்வேளையில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

அடுத்து எமது விழாவில் சிறப்பு விருந்தினராகக் கல்ந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது கோப்பாய் கல்விக் கோட்டத்தின் மதிப்பார்ந்த கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.நா.சிவநேசன் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் நீண்டகாலம் அதிபராகக் கடமையாற்றிய அனுபவத்துடன் யாழ்பாணக்கல்வி வலயத்தினைச் சார்ந்த கோண்டாவில் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்று பணியாற்றி வரும் நாளில் கோப்பாய் கல்விக் கோட்டத்தின் கோட்டக்கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்று கடந்த சிலமாதங்களாகப் பணியாற்றி வருகின்றார்.எமது பிரதேசப் பாடசாலைகளின் வளர்ச்சியிலும்,நிர்வாகப்பணிகளைச் சீரமைப்பதிலும் மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வருகின்றார்.எமது பாடசாலையின் தேவைகள் தொடர்பாகவும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டவர் என்ற வகையில் அவரைச் சிறப்பு விருந்தினராக வரவேற்பதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.அவர்தம் பணியில் சிறப்படையவும்,எதிர்காலம் வளமிக்கதாக அமையவும் இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

மற்றும் இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் பெற்றோர்கள்,பாடசாலையை நேசிக்கின்ற பழைய மாணவரகள், விழா சிறப்புற உழைத்து நிற்கும் என் அன்புக்குரிய ஆசிரியர்கள் ,மாணவர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்திக் கொண்டு எனது அறிக்கையினை முன்வைக்கின்றேன்.

பாடசாலை அறிமுகம்:

1910 ஆம் ஆண்டில் ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று படிப்படியாக வளர்ந்து வகை 11 பாடசாலையாக 106 ஆவது ஆண்டில் கால்பதித்து நிற்கின்றது. இக் கிராமத்தில் மட்டுமல்ல கோட்டத்தில் ,வலயத்தில்,மாவட்டத்தில்,மாகாணத்தில், ஏன் தேசியத்திலும் தன்புகழைப்பரப்பி பலராலும் பேசப்படுகின்ற பாடசாலையாக எமது பாடசாலை மிளிர்ந்து நிற்பதை எண்ணி நாம் பெருமைப்படுகின்றோம். அதன் வளர்ச்சிப்பயணத்தில் என்னோடிணைந்து கைகொடுத்துதவுகின்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பலவேறு வசதியீனங்களும்,நிதி நெருக்கடிகளும் இப்பிரதேசத்தக்கேயுரிய சவால்களும் எமது முன்னேற்றத்துக்குத் தடைகளாக நின்ற போதும் அவற்றையெல்லாம் எமது அயராத போராட்டத்தினால் தகர்த்தே எமது பயணத்தை நாம் நகர்த்தி வெற்றிகண்டு வருகின்றோம்.அதே வேகத்துடன் வளமிக்க எதிர்காலத்துக்காகத் தொடர்ந்து பயணிப்போம்.

## இன்றைய எமது மாணவர்விபரம்:

இக்கிராமத்திலுள்ள கல்விகற்கும் வயதுடைய அனைவரும் தரம் 1 முதல் தரம்11 வரை கற்று வருகின்ற அருகில் உள்ள சிறந்த பாடசாலையாக எமது பாடசாலை விளங்குகின்றது.

அந்தவகையில்

- ஆரம்பப்பிரிவில் தரம் 1 முதல் தரம் 5 வரை 97
- இடைநிலைப்பிரிவில் தரம் 6 முதல் தரம் 11 வரை :133
- நாளாந்த மாணவர் வரவு வீதம் : 90%ஆகும்

- வகுப்பு வாரியாக மாணவர் எண்ணிக்கை:

| தரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்த மாணவர் |
|---|---|---|---|
| 1 | 13 | 05 | 18 |
| 2 | 06 | 05 | 11 |
| 3 | 05 | 15 | 20 |
| 4 | 10 | 08 | 18 |
| 5 | 13 | 17 | 30 |
| மொத்தம் | **47** | **50** | **97** |
| 6 | 10 | 10 | 20 |
| 7 | 13 | 13 | 26 |
| 8 | 07 | 10 | 20 |
| 9 | 18 | 18 | 36 |
| மொத்தம் | **48** | **51** | **99** |
| 10 | 10 | 11 | 21 |
| 11 | 05 | 08 | 13 |
| மொத்தம் | **15** | **19** | **34** |
| முழு மொத்தம் | **110** | **120** | **230** |

## எமது ஆசிரிய வளம் :

தற்போது எமது பாடசாலையில் 19 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.அவர்களுள் இருவர் பகுதி நேர ஆசிரியர்கள்,மேலும் இருவர் தற்போது கற்கை விடுமுறையிலுள்ளனர்.

| தொ.இல | ஆசிரியர் பெயர் | தகைமை | கற்பிக்கும் பாடம் |
|---|---|---|---|
| 01 | திரு.J.A.தவநாயகம் | BA,PGDE ,MEd,DSM | அதிபர் |
| 02 | திரு.ச.மோகனகிருஷ்ணன் | Eng Trd | ஆங்கிலம் |
| 03 | திரு.சு.இந்திரகுமார் | Bsc, PGDE | கணிதம் |
| 04 | திருமதி.ச.இளங்கோ | BA,PGDE ,MEd | விஞ்ஞானம் |
| 05 | திருமதி.க.லலீசன் | BA,PGDE ,MEd | விஞ்ஞானம் |
| 06 | திரு.இ.இளங்கோ | BEd ,NCDip in pri | ஆரம்பக்கல்வி |
| 07 | திருமதி.ஜ.பிரபாகரன் | BFA Music | சங்கீதம் |
| 08 | திருமதி.சா.கீர்த்திசிங்கன் | BFA Art | சித்திரம் |
| 09 | திருமதி.S.ரஞ்சிதவாணி | NCDip in pri | ஆரம்பக்கல்வி |
| 10 | திரு.யோ.துஷ்யந்தன் | BEd NCDip in Sp Edu | விசேடகல்வி |
| 11 | தி,க.திருமாலழகன் | Bcom,PGDE ,MEd | தொ.நு.திறன் |
| 12 | திருமதி.வி.நவநீதன் | BA(Hons)PGDE | சமூகவிஞ்ஞானம் |
| 13 | திருமதி.தெ.பாலரஞ்சன் | BA,PGDE,MA | ஆரம்பக்கல்வி |
| 14 | திருமதி.ச.தவக்குமார் | Sp Trd-Pri | ஆரம்பக்கல்வி |
| 15 | திருமதி.ச.சந்திரகோபன் | BA,PGDE | சமூகவிஞ்ஞானம் |
| 16 | திரு.து.சனந்தனன் | NCDip in Maths (Eng) | த.தொ.நு |
| 17 | திரு.கு.துஷ்யந்தன் | BA,PGDE ,MEd | தமிழ் |
| 18 | திரு.சிவசொருபன் | Dip in Ph.Edu | உடற்கல்வி |
| 19 | திருமதி.ச.சோபனா | NCDip in Music | சங்கீதம் |

## எமது ஆசிரிய குழாத்தில் புதிதாக இணைந்து கொண்டோர்:

1. திரு.து.சனந்தனன் யா/இடைக்காடு ம.வியிலிருந்து…
2. திரு.கு.துஷ்யந்தன் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியிலிருந்து..
3. செல்வி.சுரேகா தனபாலன் முதல்நியமனம்
4. திருமதி.சோபனா சதீஸ்கரன் யா/மண்டைதீவு ம.வித்தியாலயத்திலிருந்து..

இவர்களை அன்புடன் வரவேற்பதில் மகிழ்சியடைகின்றேன்.

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்:

1. திருமதி.கார்த்திகா சுகந்தன் ICTயா/கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு..
2. திரு.க.கிருபாகரன் தமிழ்யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி
3. திருமதி.ஜெ.ஜெமல்டாஆரம்பக்கல்வி யா/புனித பெனடிக்ற் வித்தி
4. செல்வி.சுரேகா தனபாலன் உயிரியற் தொநு யா/வயாவிளான் மத்திய ம.வி

## பதவியுயர்வு பெற்ற ஆசிரியர்கள்:

திருமதி கவிதா லலீசன் ,திரு.யோ.துஷ்யந்தன் ஆகியோர் அதிபர் சேவை 111 க்குத் தெரிவாகி நியமனத்தை ஏற்றுள்ளனர்.அத்துடன் திரு.யோ.துஷ்யந்தன் அண்மையில் வெளியான கல்வி நிருவாக சேவைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.இவர்களிருவரும் தம்சேவையால் சிறப்படைய இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

## வாண்மைத்தகமை பெற்றோர்:

இவ்வாண்டில் கல்வி முதுமாணி(MEd)பட்டப்பின் பட்டத்துக்கான பெறுபேற்றை திருமதி.கவிதா லலீசன்,திரு.கு.துஷ்யந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.திரு.இ.இளங்கோ ,திரு..யோ.துஷ்யந்தன் ஆகியோர் கல்விமாணிப் பட்டத்திற்கான பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டனர்.இவர்கள் பெற்றுக்கொண்ட வாண்மைத்துவத்தால் வளம் பெற இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

மேலும் தற்போது கல்வி முதுமாணிக் கற்கையினை மேற்கொண்டுவரும் திருமதி வித்யா நவநீதன் மற்றும் பட்டப்பின் டிப்ளோமா கற்கையை மேற்கொண்டுவரும் திருமதி.ஜனார்த்தனி பிரபாகரன்.திருமதி. சாந்தினி கீர்த்திசிங்கன் ஆகியோர் தமது கற்கையை சிறப்புற நிறைவேற்ற என் நல்வாழ்த்துக்களை இவ்வேளையில் தெரிவித்து நிற்கின்றேன்.

## தொண்டர் ஆசிரியர்கள்:

எமது பாடசாலையில் தொடர்ச்சியாக பல வருடங்களாகவே ஆரம்பக்கல்வியில் ஆசிரியபற்றாக்குறை இருந்தே வருகின்றது.இன்றும் அதே நிலையே தொடர்கின்றது.இந்நிலையில் கல்வி அமைச்சின் கட்டளைகளுக்கும் அப்பால் எமது மாணவர்களின் கற்றலில் பாதிப்பு ஏற்படாதவாறு கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக எமது பழைய மாணவி இரததினகோபால் ரஜிதா ஆரம்பப்பிரிவில் எதுவித கொடுப்பனவுமின்றி மிகுந்த அர்ப்பணிப்போடு கற்பித்து வருகின்றார்.அதன் காரணமாகவே ஆரம்பக்கல்விச் செயற்பாடுகளைத் தடையின்றி முன்னெடுக்க எம்மால் முடிகின்றது.அவரின் எதிர்காலம் சிறக்க இவ்வேளையில் வாழ்த்துகின்றேன்.

மேலும் கணிதம்,சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் விடுமுறையில் நிற்பதன் காரணமாக இப்பாடங்களை நடாத்துவதில் நாம் இடர்பட்ட வேளையில் எமது பழைய மாணவர்களின் உதவியை நாடிய பொழுது எமதுவேண்டுகோளை ஏற்று க.பிரதீப் மற்றும் செல்விகள் பரமேஸ்வரன் கஜிதா,மகாராசா சுபாசினி ஆகியோரும்,எம்மோடிணைந்து எமக்குகைகொடுத்தனர்.இப்பொதும் உதவி வருகின்றனர்.அவர்களுக்கு எனது நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களின் எதிர்காலம் சிறக்க வாழ்த்துகின்றேன்.

## கல்வி சாரா ஊழியர்கள்:

எமது பாடசாலையில் திரு.தெ.ரகுவர்மன் ,திரு.இ.சதானந்தராசா ஆகியோர் பணியாற்றுகின்றனர்.அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன்.அண்மையில் திருமணபந்தத்தில் இணைந்து கொண்ட திரு.ரகுவர்மன் தம்பதிகளுக்கு எனது வாழ்த்துக்களையும்' தெரிவித்து நிற்கின்றேன்.

# கலைத்திட்டச் செயற்பாடுகளும், கற்றல் அடைவுகளும்

## ஆரம்பப்பிரிவு :

எமது ஆரம்பபிரிவில் நீண்டகாலமாக துறைசார் ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியாகவே பற்றாக்குறை தொடர்ந்து வருகின்றது.கடந்த ஆண்டில் ஆசிரியை திருமதி.ஜெ.ஜெமல்டா இடமாற்றம் பெற்றதற்குப் பதிலாக ஆசிரியர் நியமிக்கப்படாத நிலையில் இன்றுவரை தொண்டர் ஆசிரியர் மூலமே ஆசிரியர் தேவை நிறைவு செய்யப்பட்டுச் செயற்பாடு நிறைவேற்றப்படுகின்றது.

அத்தியாவசிய கற்றற்தேர்ச்சியை அனைவரும் அடையும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்ற எமது இலக்கு நோக்கி முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றோம்.தொடர்ச்சியான ஆசிரிய பற்றாக்குறை ,ஆசிரிய ஆலோசகர்களின் அண்மித்த வழிகாட்டல் கிடைக்காமை என்பன காரணமாக பலவீனங்களிலிருந்து முற்றாக நீங்கமுடியாத நிலையில் எமது ஆரம்பக்கல்வி முடமாகியுள்ளது.

எனினும் முயற்சிகளினாலும்,செயற்பாடுகளின் வினைத்திறன் காரணமாகவும் உயர்வான தகமையை ஒவ்வொரு தரத்திலும் நாம் வெளிப்படுத்தியே வருகின்றோம்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்:

அண்மையில் வெளியான தரம் 5 புலரமப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 26 மாணவர்களில் 20 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 77மூ மானஉயர்வான சித்திமட்டத்தை நாம் பெற்றுள்ளோம்.அத்துடன் மூன்று மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்குப் மேல் பெற்று முதன்முறையாக ஒன்றுக்கு மேற்பட்டோர் சித்தியடைந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது.2010 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று ஒவ்வொரு மாணவர் சித்திபெறுகின்ற நிலை 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகப் பேணப்பட்டு வருவதுடன் 70 புள்ளிகளுக்கு மேல் சித்திப்புள்ளியைப் பெறுவோர் எண்ணிக்கையும் உயர்ந்த நிலையில் அதிகரித்து வந்துள்ளது.எதிர்காலத்தில் 100மூ மான மாணவர்களும் சித்திப்புள்ளியை எய்தும் வகையில் ஆரம்பக்கல்விச் செயற்பாடுகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.அதற்கேற்ற வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர் பற்றாக்குறைகள் நீக்கப்படல் வேண்டும்.

பின்வரும் அட்டவணை எமது புலமைப்பரிசில் பெறுபேறுகளைக் காட்டுகின்றது.

| Year | Total –Gr.5 | Marks 70-99 | 100க்கு மேல் | வெட்டுப்புள்ளிக்கு மேல் |
|---|---|---|---|---|
| 2010 | 13 | 23% | 04% | -- |
| 2011 | 20 | 20% | 10% | -- |
| 2012 | 22 | 55% | 10% | (1) 4.5% |
| 2013 | 17 | 35% | 23.5% | -- |
| 2014 | 17 | 17.6% | 52.9% | (1) 5.8% |
| 2015 | 20 | 50% | 25% | (1) 5.0% |
| 2016 | 26 | (06) 23% | (11)42.3% | (03) 11.5% |

இவ்வாண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் விபரம்:

| மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் (152) | |
| 1. குகாகரன் தனு'கர் | 167 |
| 1. பொன்னுத்துரை சுவேதன் | 164 |
| 2. கேசவரூபன் கேமிதன் | 155 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | |
| 1. விஷ்ணுதாசன் அப்சனா | 151 |
| 2. பத்மநாதன் வைஷ்நாத் | 149 |
| 3. தவகுமார் பவித்ரன் | 134 |
| 4. மாயராசா நித்தியா | 132 |
| 5. பாஸ்கரன் நிக்ஸிகா | 128 |
| 6. சுதாகரன் துர்க்கா | 128 |
| 7. கணேசராசா கபில்ரன் | 128 |
| 8. மதனரூபன் டானுயா | 125 |
| 9. பத்மரூபன் கனிஸ்ரா | 122 |
| 10. கிருஷ்ணரூபன் துஷானிகா | 118 |
| 11. சத்தியருபன் டிசானி | 107 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்: | |
| 1. சத்தியராசா சஸ்ரீபன் | 99 |
| 2. இராசதுரை யாழ்நிலா | 95 |
| 3. ரதிவிஞ்சன் இன்பரசி | 94 |
| 4. பவனரதன் தாரணி | 91 |
| 5. து'யந்தன் பிரசாங்கன் | 90 |
| 6. விஜயானந் அபிசன் | 80 |

இவர்கள் அவைருக்கும் பாராட்டுக்களையும்,கல்வியில் மேலும் மேலும் உயர்ந்து செல்ல எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.அத்துடன் இந்த வெற்றிக்காக எம்மோடு ஒத்துழைத்த இவர்களது பெற்றோர்களுக்கும் எனது பாராட்டுக்களை நன்றியுடன் தெரிவித்துக்

கொள்கின்றேன்.பாடசாலைச் செயற்பாடுகள் வெற்றி பெறுவதற்கு பெற்றோர்களின் ஒத்துழைப்பும்,பங்களிப்பும் மிகமிக அவசியமானது அந்த வகையில் இவர்களது பெற்றோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

## க.பொ.த சா.தரப் பரீட்சை -2015:

2015 இல் க.பொ.த சா.தர பரீட்சையில் மாணவர்கள் பதினேழு பேர் தோற்றினர்.இவர்களுள் 14 பேர் உயர்தரம் கற்கும் தகுதியைப் பெற்று உயர்தரத்தைக் கற்று வருகின்றனர்.

- சித்தி வீதம்**82 %** ஆகும்.

கணித விஞ்ஞான ,தொழிநுட்ப துறைகளில் கற்கும்நிலைக்குமாணவர்களைத்தயார் செய்வது என்ற எமது இலக்கின்படி தொடர்ச்சியாக சில வருடங்களாக கணித, விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத்துறைகளில் மாணவர்கள் கற்று வருகின்றனர்.கடந்த வருட பெறுபேற்றின் அடிப்படையிலும் எமது மாணவி ஒருவர் உயிரியல் விஞ்ஞானத்துறையிலும்,மேலம் ஒரு மாணவன் தொழினுட்பத்துறையிலும் கற்றுவருகின்றனர்,

எமது அண்மைக்கால பெறுபெறுகளை அட்டவணை காட்டுகின்றது.

| பாடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| 1.தமிழ்மொழி | 86% | 100% | 100% | 91% | **88%** |
| 2.கணிதம் | 36% | 68% | 27.2% | 55% | **70%** |
| 3.விஞ்ஞானம் | 73% | 76% | 36.3% | 27% | **82%** |
| 4.வரலாறு | 82% | 100% | 72.7% | 100% | **88%** |
| 5.ஆங்கிலம் | 05% | 25% | 09.0% | 09% | **18%** |
| 6. சைவநெறி | 100% | 100% | 100% | 100% | **100%** |
| 7.புவியியல் | 25% | 92% | 87.5% | 88% | **100%** |
| 8. சங்கீதம் | 75% | 100% | 100% | 100% | **100%** |
| 9.சித்திரம் | 100% | 100% | 100% | 100% | **83%** |
| 10.விவசாயம் | 91% | 82% | 88.8% | 80% | **100%** |
| 11.குடியுரிமைக்கல்வி | --- | ----- | 100% | 89% | **83%** |
| 12.தகவல் தொ.நுட்பம் | --- | ----- | | 100% | **87.5%** |
| 13.வர்த்தகமும் கணக்கீடும் | --- | ----- | | 100% | **100%** |
| A/L தகைமை | 36% | 68% | 27% | 55% | **65%** |

கடந்த வருடம் இப்பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த எம் மாணவர்கள்உயர்கல்வியில் சிறப்படைய இவ்வேளையில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.அத்துடன் இவ்வருடம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் புதிய மாணவர்கள் உயர்ந்த பெறபேற்றைப் பெற்று பாடசாலையின் பெருமையைத் தக்க வைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஆங்கிலவளநிலையம்:

ஆங்கிலமொழிக்கற்றலை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் ஆங்கில மொழி வளநிலையத்தினை ஆரம்பக்கட்டத்தில் ஆரம்பித்துள்ளோம்.பல காட்சிப்படுத்தல்கள் ,தொலைக்காட்சி வசதி,CD பிளேயர்வசதி என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளது.மொழிவிருத்தியினை மேம்படுத்துவதற்காக பல செயற்பாடுகள் இன்னும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.எதிர்காலத்தில் மேலும் வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக ஆங்கில மொழி ஆற்றலை வளர்ப்பதற்கான முழுமையான வளநிலையமாக இதனை மாற்றுவதே எமது நோக்கமாகும்.

அழகியற் பாடங்கள்/அழகியற் கூடம்:

அழகியற் பாடங்களில்சங்கீதம் ,சித்திரம் ஆகிய பாடங்களை மாத்திரம் கற்கக்கூடிய வாய்ப்பு எமது மாணவர்களுக்குண்டு.நடனம் கற்கும் ஆர்வத்தைக் கொண்ட பல மாணவர்கள் எம்மிடம் இருந்த போதும் ஆசிரியரின்மை .இடவசதியின்மை ஆகியன அதற்குத் தடையாகவுள்ளன.20'X20' அளவுள்ள அறையே தற்போது அழகியற் கூடமாகப் பயன்படுத்தப்படுகின்றது.இக்கூட்டத்தில் சங்கீதம்,சித்திரம் ஆகிய இரண்டு பாடங்களும் நடைபெறுகின்றது.

இரண்டாம் மொழி:

சிங்களமொழி அறிவுவிருத்திக்கான வசதிகள் இங்குவழங்கப்படுகின்றது.முதன்முறையாக இம்முறை இரண்டு மாணவர்கள் க.பொ.த.சா.தர பரீட்சைக்கு இரண்டாம் மொழிப்பாடத்துக்குத் தோற்றுகின்றனர் என்பது இவ்விடத்தில்சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 4ஆம் ,5ஆம் தரங்களிலும் சிங்கள மொழிவிருத்திச் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. திரு .சுனில் அவர்கள் வாரந்தோறும் தவறாது வருகை தந்து மேம்படுத்தி வருகின்றார். அவருக்கு இவ்வேளையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள்

கலைத்திட்டச் செயற்பாடுகளில் மாத்திரமன்றி இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் நாம் ஆழக்கால்பதித்து நிற்கின்றோம் எனின் அது மிகையாகாது.அந்தவகையில் பலவேறு துறை சார்ந்த போட்டிகள் மற்றும் நிகழ்வுகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி தடம் பதித்து வருகின்றனர்.தமது ஆற்றல்களை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இது வாய்ப்பாக அமைந்துள்ளது

1. மெய்வல்லுனர் விளையாட்டுக்கள் மற்றும் பெரு விளையாட்டுக்கள்:

கடந்த வருடங்களைப் போலவே இவ்வாண்டிலும் எமது மாணவர்கள் மெய்வல்லுநர் போட்டிகளில் கோட்டம்,வலயம்,மாகாண மட்டங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த ஆண்டில் மாகாண மட்டத்தில் தங்கம் வென்ற வீராங்கனை இவ்வாண்டிலும் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்று தேசியப் போட்டியில் பங்கு கொண்டார். அத்துடன் இவ்வாண்டில் புதிதாக மேலும் ஒரு மாணவனும் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசியப் போட்டியில் பங்கு கொண்டனர்.இவ்வாறாக அண்மைய ஒவ்வோர் ஆண்டிலும் தொடர்ச்சியாக தேசியப் போட்டிகளில் பங்குபற்றுமளவுக்கு திறமைமிக்கவர்களாக முன்னேறிவருகின்ற இம்மாணவர்கள் தேசியத்திலும் சாதிக்கும் நாள் வெகு தூரத்திலில்லை என்பது வெளிப்படையாகும்.
அதற்கான போதிய பயிற்சிகளுக்கான வசதிகள் எம்மிடம் இல்லாமையே எமக்குள்ள பெருந்தடையாகும்.பொருத்தமான மைதான வசதியின்மை,இடவசதி இருந்த போதும் காணி தனியாருக்கச் சொந்தமாக இருப்பதனால் அதனை முறையாகச் சீரமைத்த மைதான வசதியை ஏற்படுத்த முடியாமை மற்றும் பயிற்றுனர்களை நியமனஞ் செய்வதற்கான நிதிவசதிகள் இன்மை என்பன

எமது மாணவர்களின் விளையாட்டு முன்னேற்றத்துக்கு பெரும் தடைகளாகவுள்ளது.எதிர்காலத்தில் இவற்றைக்களையவே நாம் தீவிரமாக முயற்சிக்கின்றோம்.

| வயதுப்பிரிவு | நிகழ்சிசகள் | மாணவர் பெயர் | கோட்டமட்டம். | வலய மட்டம் |
|---|---|---|---|---|
| 13வயது ஆண் | நீளம்பாய்தல் | வி.வினோசன் | 3ஆம் இடம் | |
| 13வயது பெண் | 4ஓ100மீ | | 1ஆம் இடம் | |
| 15 வயது பெண் | ஈட்டி எறிதல் | யோ.யதீனா | 2ஆம் இடம் | |
| 15 வயது பெண் | 4ஓ100மீ | | 3ஆம் இடம் | |
| 17 வயது் ஆண் | 1500மீ | க.சுஜீவன் | 1ஆம் இடம் | |
| 17 வயது் ஆண் | 800மீ | க.சுஜீவன் | 2ஆம் இடம் | |
| 17 வயது ஆண் | ஈட்டி எறிதல் | இ.றேகன் | 1அம் இடம் | |
| 17 வயது பெண் | குண்டெறிதல் | ச.கஜனி | 2ஆம் இடம் | |
| 17 வயது பெண் | ஈட்டி எறிதல் | ச.கஜனி | 1ஆம் இடம் | |
| 17 வயது பெண் | ஈட்டி எறிதல் | ச.ஜனனி | 2ஆம் இடம் | |
| 17 வயுது ஆண் | 4ஓ100மீ | | 2ஆம் இடம் | |
| 17 வயுது ஆண் | நீளம் பாய்தல் | கோ.விதுசன் | 2ஆம் இடம் | |
| 17 வயுது பெண் | 800மீ | ச.துளசிகா | 3ஆம் இடம் | |
| 19 வயது பெண் | 800மீ | கி.தமிழரசி | 3ஆம் இடம் | |
| 19 வயது பெண் | ஈட்டி எறிதல் | யோ.யாழினி | 1ஆம் இடம் | |
| 19 வயது பெண் | தட்டெறிதல் | யோ.யாழினி | 2ஆம் இடம் | |
| 19 வயது பெண் | குண்டெறிதல் | ச.நிவேரா | 2ஆம் இடம் | |
| 19 வயது பெண் | தட்டெறிதல் | ச.நிவேரா | 3ஆம் இடம் | |
| 19 வயது பெண் | 4ஓ100மீ | | 3ஆம் இடம் | |

### பெருவிளையாட்டுக்கள்:

பெரு விளையாட்டுக்களைப் பொறுத்தவரையில் கிரிக்கட்,எல்லே ஆகிய விளையாட்டுக்களில் எமது ஆண்,பெண் அணிகள் கோட்ட,வலய மட்டங்களில் மாத்திரமன்றி மாகாண மட்டத்திலும் பங்குகொண்டு வருகின்றனர். இவ்வாண்டில் எமது பெண்கள் கிரிக்கற் அணி வலயமட்டச் சம்பியானாக சாதனை புரிந்தமை பாராட்டுக்குரியது.

எதிர்காலத்திலும் சிறப்பான பயிற்சியின் மூலம் தரமான அணிகளை உருவாக்குவது எமது நோக்கமாகும்.அதற்கான பயிற்சிகளும் ,வசதிகளும் முழுமையாக வழங்குவதற்கான ஏற்பாடுகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்

| அணிகள் | கோட்டமட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|
| கிரிக்கட் அணி-ஆண் | ---- | ----- | ----- |
| கிரிக்கட் அணி-பெண் | முதலாமிடம் | முதலாமிடம் | பங்குபற்றல் |
| எல்லே ஆண் அணி | முதலாமிடம் | முதலாமிடம் | ------ |
| எல்லே பெண் அணி | இரண்டாமிடம் | இரண்டாமிடம் | பங்குபற்றல் |

ஒவ்வொரு அணியினருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

2.மாணவர் மன்றங்கள்:

மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களையும் ,ஆளுமையினையும் விருத்தியாக்கும் நோக்குடன் துறைசார்ந்த மாணவர் மன்றங்கள் செயற்படுத்தப்படுகின்றது.

| மாணவர் மன்றங்கள் | தலைவர் | செயலாளர் | பொறுப்பாசிரியர் |
|---|---|---|---|
| தமிழ் மன்றம் | க.சுஜீவா | ச.கஜீபனா | திரு.கு.து'யந்தன் |
| ஆங்கில மன்றம் | கோ.விதுசன் | பா.தினேசா | திரு.ச.மோகனகிரு'ணன் |
| இந்து மன்றம் | ஜெ.அஜிந்தா | த.துவாரகன் | திரு.க.திருமாலழகன் |
| சமூகவிஞ்ஞான மன்றம் | பா.தினேசா | க.சுஜீவா | திருமதி.ச.சந்திரகோபன் |
| சுகாதாரக்கழகம் | ச.கஜீபனா | மு.யாழினி | திரு.சி.சிவசொருபன் |
| கவின்கலை மன்றம் | ஜெ.அஜிந்தா | தி.சாம்பவி | திருமதி.ஜ.பிரபாகரன் |

இம்மன்றங்கள் ஒழுங்கு முறையில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் எட்டாவது பாடவேளை மேலதிக பாடவேளையாக ஒன்றுகூடலை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் இம்மன்றங்களைச் செயற்படுத்திய தலைவர்கள் செயலாளர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

3.தமிழ்மொழித்திறன் போட்டிகளும்,தமிழ் தின விழாவும்:

வருடாந்தம் நடைபெறும் தமிழ் மொழித்திறன் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படுவதுடன்,தெரிவு செய்யப்படுபவர்கள் கோட்ட மட்டப் போட்டிகளில் பங்கு கொள்கின்றனர்.இவ்வாண்டில் கோட்ட மட்டப் போட்டியில் கோ.விதுசன் பிரிவு 4 இலக்கணப் போட்டியில் மூன்றாமிடத்தினையும்,தி.தமிழ்விழி பிரிவு மூன்றில் தனியிசையில் மூன்றாமிடத்தினையும்,கோ.ஜகீசன் பிரிவு 2 இல் தனியிசையில் மூன்றாமிடத்தினையும் பெற்றுக்கொண்டனர். இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

அத்துடன் ஒவ்வோராண்டும் இரண்டாம் தவணையில் தமிழ் மன்றத்தினால் தமிழ் விழா நடாத்தப்பட்டு வருகின்றது.இவ்வருடத்தில் யூலை யில் தமிழ்விழா நடைபெற்றது.மாகாணக் கல்வித்திணைக்கள தமிழ்ப் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. கௌரி முகுந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சமூகவிஞ்ஞானப் போட்டி:சமூக விஞ்ஞானப் போட்டியிலும் எமது மாணவர்கள் வருடாந்தம் தேசியமட்டம் வரை தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.2013 இல் தேசிய மட்டத்தில் தரம் 6 பிரிவில்3ஆம் இடமும்,2014 இல் தரம் 7 பிரிவில் 6ஆம் இடத்தினையும்,2015 இல் தரம் 8 இல் முதலாமிடத்தினையும் பெற்றுக்கொண்ட செல்வன் கே.மதுமிலன்,இவ்வாண்டிலும் மாகாணமட்டத்தில் வெற்றி பெற்று தேசிய போட்டிக்குத் தோற்றியுள்ளார்.அத்துடன் கோ.விதுசன் தரம் 11 பிரிவில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசியப் போட்டிக்குத் தோற்றியுள்ளார் மேலும் இவ்வாண்டின் வெற்றியாளர்களாக

| மாணவர்பெயர் | தரம் | கோட்ட மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் |
|---|---|---|---|---|
| 1கி.புதுமிகன் | 6 | முதலாமிடம் | முதலாமிடம் | --- |
| 2. கே.மதுமிலன் | 9 | இரண்டாமிடம் | இரண்டாமிடம் | முதலாமிடம் |
| 3 வி.யானுஜா | 9 | மூன்றாமிடம் | ----- | ----- |
| 4 க.பவீசன் | 10 | இரண்டாமிடம் | மூன்றாமிடம் | ----- |
| 5. கோ.விதுசன் | 11 | முதலாமிடம் | முதலாமிடம் | முதலாமிடம் |

சமய அறிவுப்போட்டிகள்:

எமது மாணவர்கள் அனைவருமே சைவசமயத்தவர்கள் என்ற வகையில் சமய அறிவினையும் சமயப் பழக்கங்களையும் மேம்படுத்தும் நோக்கோடு பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.சமயச் சிந்தனைகள், சொற்பொழிவுகள் மற்றும் சமய நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றது.அத்துடன் சமய அறிவுப் போட்டிகள் பல நடாத்தப்படுகின்றது.சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படுகின்ற வருடாந்தப் பரீட்சைகளில் சகல மாணவர்களும் தோற்றுகின்றனர்.அது மட்டுமல்லாது கொழும்பு விவேகானந்த சபையினராலும் நடாத்தப்படுகின்ற சைவ சமய அறிவுப் பரீட்சையிலும் எமது மாணவர் வருடாந்தம் தோற்றி சானறிதழ்களைப் பெற்றுவருகின்றனர். இவ்வாண்டில் சாந்தையர் மடம் சைசமய அபிவிருத்திக்கழகம் நடாத்திய சமயப் பரீட்சையிலும் மாணவர் தோற்றியுள்ளனர்.நவராத்திரி காலப்பகுதியில் கோலம் போடல் ,தோரணம் பின்னல் ஆகிய செயன்முறைப் போட்டிகளும் நடாத்தப்படுகின்றது.

சக்தியின் பஞ்சதந்திரம் 2015/2016:

சக்தி வுஏயினால்கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டில் கடந்த மாதத்தில் நிறைவடைந்த சக்தியின் பஞ்சதந்திரம் பொது அறிவுப் போட்டி நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கான தெரிவுப் போட்டியில் தகைமை பெற்ற யாழ்வலயப்பாடசாலை என்ற பெருமை எமக்கேயுரியது.தொடர்ந்து அது மாத்திரமன்றி முதற்சுற்றிலும் வெற்றி பெற்று இரண்டாம் சுற்று /காலிறுதிப்போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பினையும் பெற்றுக் கொண்ட எமது அணியினர்வலுவான நிலையில் போராடி இரண்டு புள்ளிகள் வித்தியாசத்தில் மாத்தளை ஆமினா பெண்கள் தேசியபாடசாலை அணியிடம் வெற்றிவாய்ப்பை இழந்தனர்.காலிறுதிப்போட்டிக்குத் தகைமை பெற்ற பதினாறு பாடசாலைகளுள் இரண்டு பாடசாலைகளே வடமாகாணத்தைச் சார்ந்தவையாக இருந்தன.அவற்றுள் ஒன்றாக எமது பாடசாலை விளங்கியமை பெருமைக்குரியதாகும்.எமது போட்டியாளர் அணியில் பங்கு கொண்ட மாணவர்கள் கோகுலதாசன் விதுசன்,கணேசராசா நிருத்திகா,கணேஸ்வரன் சுஜிபா,பாரதிதாசன் தினேசா,கேசவரூபன் மதுமிலன் ஆகியோருக்கும் பயிற்றுவித்த ஆசிரியர் திரு.யோ.து'யந்தனுக்கும் எனது வாழ்த்துக்களையும்,பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.தொலைக்காட்சி நிகழ்வொன்றில் பங்கு கொண்டமை மூலம் புதியதொரு அனுபவத்தை இம்மாணவர்கள் பெற்றுக்கொண்டமை சிறப்பம்சமாகும்.

மாணவர் பாராளுமன்றம்:

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மாணவர் பாராளுமன்றம் அமைப்பதற்கான தேர்தல் நடைபெற்று அதன் மூலம் 6 தொட்க்கம் 11 வரையான வகப்பக்களை உள்ளடக்கியதாக 60 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இவர்களுக்கான முதலாவது அமர்வும் சத்தியப்பிரமாண நிகழ்வும் விரைவில் நடைபெறவுள்ளது.

10 துறைகளுக்குமான 10 அமைச்சர்கள் பதவியேற்க விருக்கின்றார்கள். இவர்கள் துறைசார்ந்த விடயங்களில் அதிக கவனஞ் செலுத்தி பாடசாலையினதும் கிராமத்தினதும் தேவைகளை நிறைவேற்றவதில் முன்னின்று உழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

# பௌதீக வள விருத்தி

1.புதிய வகுப்பறைக் கட்டடம்:

கடந்த 2010 ஆண்டிலிருந்து நாம் வலியுறுத்தி வந்த எமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு இவ்வாண்டில் புதிய வகுப்பறைக்கட்டடடத்தக்கான அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றது.TESP திட்டத்தின் கீழான. நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வகுப்பறை வசதிகளின் மூலம் எமது நீண்டகால இடநெருக்கடிப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவுள்ளது. அடைக்கப்பட்ட வகுப்பறைகள் அற்ற நிலையில் கற்று வந்த எமது மாணவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாக அமையுமெனின் மிகையாகாது. இக்கட்டடத்தை எமக்கு வழங்குவதில் பங்களித்த வலயக்கல்விப்பணிப்பாளர்,மற்றும் திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர்,தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் மாகாணகல்வி அமைச்சு குறிப்பாக கல்வி அமைசில் பணியாற்றும் எமது பழைய மாணவன் திரு.ம.ஜீவாகரன் அவர்களுக்கும் எமது நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2.விளையாட்டு உபகரணங்கள் கிடைக்கப் பெற்றமை::

இன்றைய விழாவின் பிரதம விருந்தினர் அவர்களின் அனுசரணையில் இரண்டு சந்தர்ப்பங்களில்எமக்கு வியைாட்டு உபகரணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. முதலாவது சந்தர்ப்பத்தில் விளையாட்டுக்கழகங்களுக்காக வழங்கப்பட்ட கிரிக்கட் விளையாட்டு உபகரணங்கள் எமது வேண்டுகோளுக்கமைய எமக்கும் வழங்கப்பட்டது.இரண்டாவதாக 2016 ஆம் ஆண்டுக்கான மாகாணசபை உறுப்பினருக்கான பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின்மூலம் பிரதம விருந்தினர் அவர்கள் ரூபா 50 ஆயிரத்தை எமக்கான விளையாட்டு உபகரணக் கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்டதன் மூலம் வலயக்கல்வி

அலுவலகத்தினால் எமக்கான மெய்வல்லுனர் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் எமது பெருமளவிலான விளையாட்டுபகரணத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது.அந்த வகையில் எமது பாடசாலையின் அவசிய தேவை ஒன்றை நிறைவு செய்வதற்குப் பங்களித்த எமது பிரதம விருந்தினர் திருமதி அனந்தி சசிதரன் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகளை இவ்வேளையில் தெரிவித்து நிற்கின்றேன்.

3.“அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை”என்ற வேலைத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கான மலசலகூடம் அமைத்தல்,பெண்கள் மலசல கூடத்திருத்தம்,குடிநீர்த் தொட்டி அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.இதன் மூலம் பாடசாலையின் சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் தொடர்பான தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வசதிகள் மேம்பாடடைய வழியேற்பட்டுள்ளது.

4.தளபாடம்/கணினிதிருத்தம்: வருடாந்த தளபாடத்திருத்த நிதி ஒதுக்கிடு

கடந்த வருடங்களைப் போலவே இவ்வாண்டிலும் தளபாடம் மற்றும் கணினி திருத்தம் என்பனவற்றிற்காக எமக்கு நிதி ஒதக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திருத்தம் செய்யவேண்டிய தளபாடங்கள் அனைத்தும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.அனைத்து கணினிகளும் இயங்க நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

5.விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகள் அன்பளிப்பு :

எமது பழைய மாணவன் இலண்டனில் வசிக்கும் குமாரசாமி கானமூர்த்தி அவர்கள் எமது விளையாட்டு வீரர்கள் பொருத்தமான உடைகளுடன் விளையாட்டுக்களில் பங்குபற்றுவதற்கு ஏற்ற வகையில் ரூபா 24,000/= செலவில் பொருத்தமான சீருடைகளை தயார்செய்வதற்கு உதவியுள்ளார்.இதுவரை காலமும் வேறுபட்ட உடைகளுடன் வியைாட்டுக்களில் பங்குபற்றி வந்த எம் மாணவர்கள் ஒரே சீருடையில் விளையாட்டுக்களில் பங்கு பற்ற வாய்ப்பப் பெற்றமை பெரும் பேறாகும். மனமுவந்து வழங்கி உதவிய திரு.கு.கானமூர்த்தி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

7.போட்டோ பிரதி இயந்திரம் கிடைத்தமை :

மாகாண கல்வித்திணைக்களத்தினால் புதிய போட்டோ பிரதி இயந்திரமொன்று இரண்டாம் தவணையில் எமக்கு வழங்கப்பட்டுள்ளது.அதனை எமக்கு வழங்கி உதவிய மாகாணத்திணைக்கள அதிகாரிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# பாடசாலை பெற்றுக் கொண்ட வெற்றிகளும் சாதனைகளும் - 2015/2016

1.சிறந்த செயற்பாடுகளுக்கான கல்வி அமைச்சின் தேசியவிருது -2015

**Programme of School Best Practices** - 2015

பாடசாலைகளின் சிறந்த செயற்பாடுகளுக்கு வருடம் தோறும் மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டு வருகின்ற சிறந்த செயற்பாடுகளுக்கான விருது 2015 ஆம் ஆண்டிற்குரியது எமது பாடசாலைக்கு கிடைக்கப் பெற்றமை பெருமைக்குரியதாகும். யாழ்ப்பாண வலயத்தைச்சார்ந்த நான்கு பாடசாலைகளுக்குள் நாங்களும் ஒருவர் என்ற வகையில் நாம் பெருமைப்படுகின்றோம்..சிறந்த செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் சிறப்பாக செய்றபடுத்தவதற்கு துணை செய்யும் எமது ஆசிரிய குழாத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றிகள்.

2.சக்தி வள கழகங்களுக்கிடையிலான நாடகப்போட்டியில் மாகாண மட்டத்தில் இரண்டாமிடம்பெற்றமை:

**Provincial Awards – Energy Education Programme -2016**

எமது பாடசாலைச் சக்திவள கழகத்தினால் மேடையேற்றப்பட்ட "ஒளி பிறந்தது" என்ற சக்தி வளச் பயன்பாடு பற்றிய மேடை நாடகம் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று வவுனியாவில் நடைபெற்ற மாகாணமட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று மாகாணமட்டத்திலான விருதினைப் பெற்றுக் கொண்டது. இதில்பங்கு பற்றி தரம் 9 மாணவர்கள் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி.ச.இளங்கோ ஆகியோருக்கும் அவரோடிணைந்து பங்களித்த அனைவருக்கும் எனது மனங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

3.தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் இருவர் பங்கு கொண்டமை:

இவ்வாண்டில் கண்டி போகம்பரவில் நடைபெற்ற தேசியமட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் எமது மாணவர்கள் செல்வி. க.கஜனி,செல்வன்.இ.றேகன் ஆகியோர் ஈட்டி எறிதல் நிகழ்வில் பங்கு கொண்டனர்.தொடர்ச்சியாக ஒவ்வோராண்டும் தேசிய மட்டம் வரை மெய்வல்லுனர்ப்போட்டிகளில் பங்கு கொண்டுவரும் எமது மாணவர்கள் இவ்வாண்டிலும் தமது திறமையை வெளிப்படுத்தி தேசியப் போட்டியில் பங்கு கொண்டனர்.எதிர்காலத்தில் தேசியத்தில் பதக்கம் வெல்லும் நாள் தொலைவிலில்லை என்பதே எமது நம்பிக்கையாகும். இவர்களுக்கு எனதுபாராட்டுகள் உரித்தாகுக.

4.தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி வீதம் அதிகரித்துள்ளமை :

2010 ஆம் ஆண்டிலிருந்து ஒருவர் வீதம் வருடாந்தம் வெட்டுப்புள்ளியைத் தாண்டிதகைமை பெற்று வந்தனர்.இவ்வாண்டு ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில்மூன்று மாணவர்கள் தகைமை பெற்றமை இவ்வாண்டில் நடைபெற்ற

சிறப்புக்களில் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 26 இல் 20 மாணவர்கள் சித்திப்புள்ளிக்கு மேல் பெற்றுக் கொண்டமை இவ்வாண்டின் சிறப்பம்சமாகும்.அத்துடன் எதிர்காலத்தில் இந்நிலை தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன். இவ் வெற்றிநிலைமைக்கு முழுயான பங்களிப்பினை வழங்கிய ஆசிரியை திருமதி றஞ்சிதவாணி சஞ்சித்குமார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5.சமூகவிஞ்ஞானப் போட்டியில் தொடர்ச்சியான மாகாண,தேசிய மட்ட வெற்றிகள் :தொடர்ச்சியாக ஒவ்வோராண்டு இப்போட்டியில் கோட்டம்,வலயம், மாகாணம் ,தேசியம் என மாணவர்கள் வெற்றிகளைப் பெற்று வருகின்றனர்.இவ்வாண்டில் இரண்டு மாணவர்கள் மாகாண மட்டத்தில்முதலிடத்தைப் பெற்று தேசியப் போட்டிக்கும் தோற்றியுள்ளனர்.இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் திருமதி ச.சந்திரகோபனுக்கு எனது நன்றிகள்.

6.ஆங்கிலதினப் போட்டி– 2016 **English Day Competition-2016**

**1.S.PuthumikanGrade 6 -Dictation -1st -Divisional Level**

**2.K.Vithushan Grade 11 -Dictation - 2nd - Divisional Level**

**3.K.Vithushan Grade 11 -Creative Writing - 3rd - Divisional Level**

**4. P.Thinesha Grade 11 - Copy Writing- 3rd - Divisional Level**

கோட்ட மட்டத்தில் ஆங்கில தினப்போட்டிகளில் இடங்களைப் பெற்றமை பாராட்டுக்குரியதாகும்.அந்தவகையில் வெற்றி பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த எமது ஆங்கில ஆசிரியர் திரு .ச.மோகனகிருஷ்ணன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

## எமது அவசிய தேவைகள் சில:

1.பாடசாலைமுன்புறச் சுற்று மதிலைப் பூரணப்படுத்தல் அவசியமான தேவையாகவுள்ளது.
2.ஆசிரியர்கள் , மாணவர்களின் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்புக்கான தரிப்பிடம் அமைத்தல் எமது தேவையாகவுள்ளது.
3. இவ் விழா மண்டபத்தை,இந்த மேடையை திருத்தியமைத்து ஓரளவாவது வசதிமிக்கதாக மாற்ற வேண்டியுள்ளது.
4. பாடசாலைக்கென விளையாட்டு மைதானத்தை உரித்தாக்குதல்.அதனைத் திருத்தி அமைத்து பொருத்தமான தேவையாகவுள்ளது
5.பாடசாலை நுழைவாயிலைத் திருத்தியமைத்தல், முற்றத்தினை மட்டப்படுத்தி அழகுபடுத்தி பாடசாலையின் கவின்நிலையை மேம்படுத்தல் எமது தேவையாகவுள்ளது.

# எமது நன்றிகள்

1. எமது பாடசாலைச் செயற்பாட்டிற்குத் துணையாகச் செயற்படுகின்ற எமது வலயக்கல்விப்பணிப்பாளர்,பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள்,உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்,ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகளை இவ் வேளையில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2. மேலும் பாடசாலை முன்னேற்றத்திற்காக உதவி புரிகின்ற பெற்றோர்கள்,பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.
3. எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக என்னோடிணைந்து பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4. மேலும் இன்றைய விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் கௌரவ வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி.அனந்தி சசிதரன் அவர்களுக்கும்,சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும்எமது கோட்டக்கல்விப் பணிப்பாளர், திரு.நா.சிவநேசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

5. இறுதியாக இன்றைய பரிசில் நாள் சிறக்க நிதி அன்பளிப்புக்களைச் செய்துதவிய கல்விக் காருண்யன் எனச் சிறப்பிக்கப்படும் திரு. E.S.P நாகரட்ணம் அவர்களுக்கும் திருமதி.S.கலா(சுவிஸ்)அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து இந்நன்றியுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

திரு.J.A.தவநாயகம்,

அதிபர்

# பரசில் பெறும் மாணவர் விபரம்

# PRIZE WINNERS

1. கல்வி அடைவு மட்டம் - 2015

| Grad e தரம் | Name பெயர் | Supper Proviciency அதிவிசேடம் | General Proviciency விசேடம் | General Progress சாதாரணம் |
|---|---|---|---|---|
| 1 | அ.அஜய் | அனைத்துப் பாடமும் | | |
| | ச.யசிந்தாஸ் | சைவ,தமி,கணி | சுற் | |
| | பா.நிகேசன் | கணி | சைவ,தமி,சுற் | |
| | சி.ராகவி | அனைத்துப் பாடமும் | | |
| | த.துசானிகா | | சைவ,கணி | தமி,சுற் |
| | சு.காவேரி | | சைவ,சுற்,கணி | தமி |
| | சி.யதுநிலா | | | சைவ,தமி,கணி,சுற் |
| | தெ.மேனுஷா | அனைத்துப் பாடமும் | | |
| 2 | ஸ்ரீ.கிசாமிகன் | தமி,ஆங் | சைவ,கணி,சுற் | |
| | ச.சாருஜன் | தமிழ் | | கணி,சுற்,ஆங் |
| | து.ரமேஸ் | | | கணி,சுற்,ஆங் |
| | பா.பவீசன் | அனைத்துப் பாடமும் | | |
| | இ.யாழ்நிலவன் | | ஆங்கிலம் | |
| | இ.கிருசாந்தி | | கணி,ஆங் | சைவ,தமி,சுற் |
| | ஈ.கௌதமி | அனைத்துப் பாடமும் | | |
| | கு.நிருஜிகா | அனைத்துப் பாடமும் | | |
| | நீ.நிருசா | | சைவ,கணி,சுற்,ஆங் | தமிழ் |
| | ற.அபிசேகா | அனைத்துப் பாடமும் | | |
| | சி.சாரதா | சைவ,தமி,கணி,சுற் | ஆங்கிலம் | |
| | வி.வினுஜா | அனைத்துப் பாடமும் | | |
| | க.ஜபர்ணா | அனைத்துப் பாடமும் | | |
| | தி.தமிழ்க்கனி | அனைத்துப் பாடமும் | | |
| | ய.ஜஸ்மினா | அனைத்துப் பாடமும் | | |
| | இ.ஜெனிதா | | தமி,சுற் | கணி,ஆங் |
| | தி.அனுசியா | | | தமி,கணி,சுற்,ஆங் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ச.சகானா | அனைத்துப் பாடமும் | | |
| 3 | ச.சுஜானுஜன் | | தமி,கணி,சுற் | சைவ |
| | ப.பரணீதரன் | | | தமி,கணி,சைவ,சுற் |
| | ற.துவாரகன் | அனைத்துப் பாடமும் | | |
| | சி.மதுசாந் | | தமிழ் | சைவ,கணிசுற் |
| | பி.பவிசா | | | தமி,சைவ |
| | க.கயானிகா | | | தமி,சைவ |
| | கௌ.பானுஜா | அனைத்துப் பாடமும் | | |
| | ஐ.அனோஜா | | | தமிழ் |
| | ப.வைஸ்ணகி | அனைத்துப் பாடமும் | | |
| 4 | கே.கேமிதன் | அனைத்துப் பாடமும் | | |
| | பொ.சுவேதன் | தமி,கணி,சுற்,சைவ | | ஆங் |
| | ப.வைஸ்ணாத் | அனைத்துப் பாடமும் | | |
| | கு.தனுஷ்கர் | அனைத்துப் பாடமும் | | |
| | க.கபில்ரன் | சைவ,தமி, | சுற் | கணி |
| | ச.சஸ்ரீபன் | | தமி | சைவ,கணி,சுற் |
| | த.பவித்ரன் | கணி | சைவ,தமி,சுற் | |
| | ப.தாரணி | | | சைவ,தமி,கணிசுற் |
| | மா.நித்தியா | சைவ,தமி,கணி,சுற் | | ஆங் |
| | இ.இன்பரசி | | கணி | |
| | ச.டிசானி | | | சைவ,தமி,கணிசுற் |
| | வி.அப்சனா | சைவ,தமி,கணி | சுற்,ஆங் | |
| | பா.நிக்ஜிகா | தமி | கணி,சுற் | சைவ,ஆங் |
| | சு.துர்க்கா | | சைவ,தமி,கணி,சுற் | |
| | ம.டனுஜா | | தமி,சுற் | சைவ,கணி |
| | ப.கனிஸ்ரா | ஆங் | சைவ,தமி,கணி | சுற் |

| | | | | |
|---|---|---|---|---|
| | கி.துஷானிகா | தமி | கணி,சுற்,ஆங் | சைவ |
| | இ.யாழ்நிலா | | தமி | சைவ,கணி,சுற் |
| 5 | இ.லதுர்சன் | | சைவ,தமி | கணி,சுற் |
| | க.சந்தோஷ் | சைவ,கணி,தமி,சுற் | | ஆங் |
| | ஸ்ரீ.புதுமிகன் | அனைத்துப் பாடமும் | | |
| | ப.டினோஜன் | | | சைவ,தமி,சுற் |
| | சி.வஜிந்தன் | தமி,சைவ | சுற் | கணி,ஆங் |
| | த.சுதன் | | | தமி |
| | சு.சுமன் | | | சைவ,தமி,சுற் |
| | வி.வித்யா | தமி,சைவ | கணி,சுற் | |
| | லி.அஜ்வினி | சைவ,கணி,தமி,சுற் | ஆங் | |
| | தி.தமிழ்விழி | தமி,சைவ | கணி,சுற் | |
| | ச.துளசிகா | சைவ,சுற் | தமி | கணி |
| | வி.வினோதினி | | சைவ,தமி | கணி,சுற் |
| | ஸ்ரீ.ஸ்ரீநதியா | | | தமிழ் |
| | வி.வினோபா | | | சைவ,தமி,ஆங் |
| | ஜெ.மேருசா | | | சைவ,தமி |
| | தி.கௌசிகா | | | சைவ,தமி,சுற் |

| Grade தரம் | Name பெயர் | Supper Proviciency அதிவிசேடம் | General Proviciency விசேடம் | General Progress சாதாரணம் |
|---|---|---|---|---|
| 6 | ப.வைஸ்ணவி | தமி,வைம்,கணி,விஞ்,வர, சுகா, குடி,புவி,செ.தொ,சங்,ஆங் | | |
| | கி.நிலக்சன் | தமி,சைவம,கணிதம் | விஞ்,குடி,செ.தொ,சித்திரம் | புவி,வரலா, சுகா,ஆங் |
| | க.ஜனோபா | தமி,சைவம்,கணி,விஞ்,குடி,சித் | ஆங்,புவி,வரலா, சுகா,செ.தொ | |
| | தெ.ஜதுசன் | | தமி,விஞ் | சைவம்,கணி,புவி,சுகா,குடி,செ.தொ,சித் |
| | ஜெ.அபிரா | | தமி,சைவம்,ஆங், சங்கீதம் | கணி,விஞ், வரலா,சுகா,குடி,செ.தொ |
| | ப.கம்சா | சைவம்,சங் | தமி,கணி,ஆங்,விஞ், புவி,வரலா,சுகா,குடி, செ.தொ | |
| | சி.கயானா | சைவம் | தமி,குடி,சங் | கணி,விஞ்,புவி,வரலா,சுகா,ஆங்,செ.தொ |
| | கி.வானதி | | தமி,சைவம்,கணி, சுகாதாரம் | ஆங்,விஞ்,புவி,வரலா,குடி, செ.தொ,சங்கீதம் |
| | சு.தீபிகா | | தமி,சைவம்,விஞ், சங்கீதம் | கணி,புவி,குடி,வரலா,சுகா,செ.தொ |
| | செ.அன்பரசன் | | சித்திரம் | தமி,கணிதம் |
| | வி.வினோஜன் | | சைவம் | தமி,கணி,விஞ், சுகா,குடி,செ.தொ,சித்திரம் |
| | கோ.பிரவீன் | | | தமி,செ.தொ,சித் |
| | ஸ்ரீ.சுயன் | | | கணிதம் |
| | ச.சயந்தன் | | விஞ்,சித்திரம் | கணி,சைவ,புவி, சுகா,செ.தொ,குடி |
| | தெ.கனிஸ்ரன் | | | சைவம்,சித் |
| | சு.ரூபிகா | | சைவம்,விஞ், செ.தொ,சங் | தமி,கணி,வர,புவி, சுகா,குடி |
| | ஜெ.ருபெக்'ா | | | தமி,சைவ,புவி, செ.தொ,குடி,சங் |
| | த.துர்க்கா | | | சைவ,சங் |
| | தி.தமிழ்ப்பிரியா | | | சைவ,செ.தொ,சங் |
| | த.அஜந்தா | | | சித்திரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இ.பவிராஜ் | | | சித்திரம் |
| 7 | வி.தர்மிஷன் | தமி,கணி,வர,குடி,புவி,சைவ,<br>சுகா,செ.தொ,சித்திரம் | விஞ்ஞானம் | ஆங்கிலம் |
| | க.கயானன் | | சுகா,சித்திரம் | தமி,விஞ்,வர,குடி,புவி,சைவம்,செ.தொ |
| | வி.வினோதாராஜ் | | | குடி,சுகா,செ.தொ,சித்திரம் |
| | தி.திருவோஜிதன் | சைவம் | தமி,விஞ்,குடி,சுகா,செ.தொ,சித்திரம் | கணி,வர,புவி |
| | இ.யசிகரன் | | தமி,குடி,சைவ,சுகா,சித்,செ.தொ | |
| | வி.விதுசன் | | | தமி,குடி,சைவ,சுகா,செ.தொ,சித் |
| | மோ.டினோஜன் | சைவம்,சித்திரம் | தமி,விஞ்,குடி,புவி,சுகா,செ.தொ | ஆங்,வர,கணி |
| | கி.ஜீவிகா | தமி,குடி,சைவ,சங்,சுகா | ஆங்,செ.தொ | கணி,விஞ்,வர,புவி |
| | பொ.சுவேதா | தமி,கணி,வர,குடி.புவி,சைவம்,சுகா,செ.தொ,சங் | ஆங்,விஞ் | |
| | த.அபிநயா | தமி,குடி,புவி,சைவ,சுகா,செ.தொ,சங் | ஆங்,கணி,விஞ்,வரலாறு | |
| | பா.நிரோஜா | | | தமி,குடி,சைவ,சுகா,செ.தொ,சங் |
| | இ.யகிதா | | | தமி,குடி,சைவ,சுகா,செ.தொ,சித் |
| | ச.பவிதா | | சைவ,சங், | தமி,குடி,சுகா,செ.தொ |
| | கெ.பிரியங்கா | | சைவ,தமி,குடி,சுகா,சங், | விஞ்,வர,புவி,செ.தொ |
| | வி.கஜீனா | | குடி,சைவ,சுகா,செ.தொ | தமி,புவி,சங் |
| | ச.சர்விகா | | | குடி,சைவ,சுகா,செ.தொ,சித் |
| | சி.டினிஷா | | சைவம்,சித் | தமி,குடி,செ.தொ |
| 8 | கே.மதுமிலன் | அனைத்துப் பாடங்களும் | | |
| | கோ.யகீசன் | தமி,சைவ,சுகா,சங் | ஆங்,கணி,புவி,செ.தொ,குடி | விஞ்,வர |
| | இ.திலக்சிகன் | | கணி,தமி,விஞ்,வர,சங் | சைவ,புவி,சுகா,செ.தொ,குடி |
| | செ.தமிழரசன் | | தமி,சைவ,சித் | விஞ்,வர,புவி,சுகா,செ.தொ,குடி |
| | மா.பவித்திரன் | தமி,சைவ,புவி,சங்,குடி | விஞ்,சுகா,செ.தொ | கணி,வர |
| | ச.சாஜகான் | | தமி,சுகா,செ.தொ | கணி,விஞ்,சைவ,வர,புவி,சங்,குடி |
| | ச.சோபிதன் | | | தமி,சித் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தி.திருசுமன் | | | தமிழ் |
| | சு.இதயசங்கர் | | | செ.தொ,சித் |
| | வி.அனுசன் | | | சித்திரம் |
| | தெ.தேனுசன் | | சித்திரம் | தமிழ் |
| | உ_.சாளினி | தமி,சைவ,வர,செ.தொ,சங்,குடி | விஞ்,புவி,சுகா | |
| | கி.நிலானி | தமி,சைவ,சுகா,சங் | விஞ்,புவி,செ.தொ,குடி | ஆங்கிலம் |
| | வி.யானுசா | தமி,சைவ,வர,புவி,சித்,குடி | விஞ்,சுகா,செ.தொ | கணிதம் |
| | ச.தேனுஜா | தமி,சைவ, | புவி,சுகா,சங்,குடி | விஞ்,வர,செ.தொ |
| | து.சுகிர்தா | சைவ,புவி,செ.தொ | தமி,விஞ்,வர,சுகா,குடி | சங்கீதம் |
| | பி.மதுஷா | | தமி,சைவ,வர,புவி,சுகா,செ.தொ,சங்,குடி | விஞ்ஞானம் |
| | வி.விஜீபா | | தமி,சங் | சைவ,வர,புவி,சுகா,செ.தொ,குடி |
| | ம.கவிதா | | தமி,செ.தொ,குடி | விஞ்,சைவ,சுகா,சங் |
| | இ.பவித்திரா | | தமிழ் | விஞ்,சைவ,வர,புவி,சுகா,செ.தொ,சித்,குடி |
| | ம.கனிஸ்ரா | | தமி,சுகா,செ.தொ,சங்,குடி | விஞ்,சைவ,வர,புவி |
| | ச.சர்வேசினி | | சங்கீதம் | தமி,சைவ,சுகா,செ.தொ,குடி |
| | செ.துளசிகா | | | சித்திரம் |
| | யோ.யதீனா | | | தமி,சைவ.சுகா,சங்,குடி |
| | சி.றஜிந்தா | | | தமி,சங் |
| 9 | வி.நிரோஜன் | சைவ,தமி,செ.தொ,குடி,சித் | கணி,ஆங்,வர,சுகா | விஞ்,புவி |
| | பி.பிரதாபன் | செ.தொ | சைவ,தமி,வர,சித் | கணி,விஞ்,புவி,சுகா,குடி |
| | க.பவீசன் | சைவ,தமி,வர,சித் | விஞ்,புவி,சுகா,செ.தொ,குடி | கணிதம் |
| | ஸ்ரீ.சுதன் | | சைவம்,செ.தொ | தமி,புவி.சுகா.குடி,சங் |
| | கி.அஜித் | | சித்திரம் | சைவ,தமி,சுகா,செ.தொ,குடி |
| | இ.றேகன் | | | சைவ,தமி,விஞ்,சுகா,செ.தொ,குடி,சங் |
| | கு.ஜுவசர்மா | | சைவ,சங் | தமி,விஞ்,வர,புவி,சுகா,செ.தொ,குடி |
| | த.துவாரகன் | சித்திரம் | | சைவ,தமி,சுகா,செ. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தொ,குடி |
| | இ.யசிந்தன் | | சித்திரம் | சைவ,சுகா,செ.தொ,குடி |
| | வி.வினோத் | | | சைவ,தமி,செ.தொ,சித் |
| | கு.தர்மினி | | | சைவ,தமி,வர,சுகா,செ.தொ,குடி,சங் |
| | ஜெ.ஜெசித்தா | சைவநெறி | தமி,சுகா,செ.தொ,குடி,சங் | விஞ்,வர,புவி |
| | சு.சாருஜா | | சைவ,தமி,விஞ்,சுகா,செ.தொ,குடி,சங் | கணி,ஆங்,வர,புவி |
| | தி.றெஜிந்தா | | சைவ,சங் | தமி,சுகா,செ.தொ,குடி |
| | ச.கயனி | | சங்கீதம் | சைவ,தமி,சுகா,செ.தொ,குடி |
| | வி.வினோஜா | சங்கீதம் | சைவ,செ.தொ | தமி,விஞ்,வர,குடி |
| | க.திவ்யா | | சைவ,சங் | தமி,வர,சுகா,செ.தொ,குடி |
| | யோ.நிதுசாயினி | | சைவ,சங் | தமி,வர,சுகா,செ.தொ,குடி |
| | தி.சாம்பவி | | | சைவ,தமி,சுகா,செ.தொ,குடி,சங் |
| | செ.செந்தீபா | | | சைவ,தமி,சுகா,செ.தொ,குடி,சங |
| | சி.ஜெனனி | சைவநெறி | | தமி,சுகா,செ.தொ,சங் |
| 10 | கோ.விதுசன் | அனைத்துப் பாடங்களும் | | |
| | க.சுஜீவன் | சைவநெறி | தமி,கணி,புவி,சித் | விஞ்,வர,ஆங்,விவ |
| | இ.யானுசன் | | | தமி,சித்,சுகா |
| | ச.ரசிதரன் | | | தமி,சங் |
| | த.அனுசன் | | | சங்கீதம் |
| | பா.தினேசா | சைவ,புவி,சங் | தமி,விஞ்,வர | கணி,ஆங்,விவ |
| | க.நிருத்திகா | சைவ,வர,சங் | விஞ்,புவி,ஐஊவு | கணி,ஆங் |
| | க.சுஜீவா | சைவநெறி | தமி,வர,புவி,சங்,ஐஊவு | ஆங்,விஞ் |
| | ஜெ.அஜிந்தா | | சைவ,சங் | தமி.விஞ்,வர,புவி,ICT |
| | மு.யாழினி | சிங்களம் | சுகாதாரம் | சைவ,தமி,சங் |
| | கி.தமிழரசி | | | சைவ,சங் |
| | க.கஜீபனா | சிங்களம் | | சைவ,சுகா,தமி,வர,சங் |
| | த.தக்சாயினி | | | சைவ,சங் |

இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் வெற்றி பெற்றோர் விபரம்:

❖ **English Day Competition** – 2016

**(Divisional Level)**

1. S.Puthumikan – Grade 6 – Dictaton – 1'St Place
   Creative writing -3'rd Place

2. K.Vithushan - Grade 11– Dictaton – 2'nd Place
   Creative writing -3'rd Place

3. P.Thinesha - Grade 11–Cursive Writing- 3'rd Place

4. K.Jeevika - Grade 8- Recitation – 2'nd Place

❖ சக்தி வளக் கழகம்

கனிஷ்ட பிரிவு – நாடகம் வலயமட்டம் - முதலாமிடம் , மாகாண மட்டம் - இரண்டாம் இடம்

1. கே.மதுமிலன்
2. கி.நிலானி
3. உ.சாளினி
4. வி.யானுஷா
5. து.சுகிர்தா
6. ச.தேனுஜா
7. ச.சோபிதன்
8. ச.சாஜகான்

- கனிஷ்ட பிரிவு – டிஜிட்டல் சுவரொட்டிப் போட்டி – வலயமட்டம் - வி.யானுஷா - இரண்டாம் இடம்

- சமூக விஞ்ஞானப் போட்டி
    1. ஸ்ரீ.புதுமிகன் - தரம் 6 – முதலாமிடம்
    2. கே.மதுமிலன் -தரம் 9 - இரண்டாமிடம் - மாகாண மட்டம் - முதலாமிடம்
    3. க.பவீசன் -தரம்- 10 - மூன்றாமிடம்
    4. கோ.விதுசன் - தரம் - 11- முதலாமிடம் - மாகாண மட்டம் - முதலாமிடம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் விபரம்:

| மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் (152) | |
| 2. குகாகரன் தனு'கர் | 167 |
| 3. பொன்னுத்துரை சுவேதன் | 164 |
| 4. கேசவரூபன் கேமிதன் | 155 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர் | |
| 10. விஷ்ணுதாசன் அப்சனா | 151 |
| 11. பத்மநாதன் வைஷ்நாத் | 149 |
| 12. தவகுமார் பவித்ரன் | 134 |
| 13. மாயராசா நித்தியா | 132 |
| 14. பாஸ்கரன் நிக்ஸிகா | 128 |
| 15. சுதாகரன் துர்க்கா | 128 |
| 16. கணேசராசா கபில்ரன் | 128 |
| 17. மதனரூபன் டானுயா | 125 |
| 18. பத்மரூபன் கனிஸ்ரா | 122 |
| 10. கிருஷ்ணரூபன் துஷானிகா | 118 |
| 12. சத்தியருபன் டிசானி | 107 |
| 71 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்: | |
| 7. சத்தியராசா சஸ்ரீபன் | 99 |
| 8. இராசதுரை யாழ்நிலா | 95 |
| 9. ரதிவிஞ்சன் இன்பரசி | 94 |
| 10. பவனரதன் தாரணி | 91 |
| 11. துஷ்யந்தன் பிரசாங்கன் | 90 |
| 12. விஜயானந் அபிசன் | 80 |

க.பொ.த சா.தரப் பரீட்சை -2015 சித்தி பெற்ற மாணவர் விபரம்

| இல | பெயர் | பெறுபேறு |
|---|---|---|
| 01 | ச.சஸ்ரீபா | 5A,2B,C,S |
| 02 | வி.யனித்தா | 3A,2B,2C,S |
| 03 | செ.லகீசன் | 2A,2B,3C,2S |
| 04 | கி.விஷ்ணுகா | 2A,B,C,4S |
| 05 | க.கனுஜன் | A,B,3C,4S |
| 06 | லி.நிஷாந்தாஸ் | A,2B,C,4S |
| 07 | சி.ஜிவன்சன் | A,2C,5S |
| 08 | பு.துபாசன் | 4C,4S |
| 09 | ச.நிவேரா | 2B,4C,2S |
| 10 | யோ.யாழினி | A,B,3C,3S |
| 11 | லோ.கிஷானி | B,2C,5S |

## MINISTRY OF EDUCATION

# CERTIFICATE OF APPRECIATION

This is to certify that

Viharawatthai Vigneshwara Vidyalaya / ~~College~~

of

Jaffna

Education Zone

Is awarded

this Certificate of Appreciation

for the improvement of school education

under the

**Programme of School Best Practices 2015**

Conducted by the Management and Quality Assurance Branch,

Ministry of Education

for their Effort

in

Implementing and Practicing School Level Strategies.

S.U.Wijerathne
Additional Secretary
(Policy, Planning, Performance and Review)

W.M.Bandusena
Secretary
Ministry of Education

Sanu Printers, Puttur T.P: 0776386117, 0215680447